தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
சேலம் மேட்டூர் சங்ககிரி எடப்பாடி 95666 11366
ஏற்காடு ஆத்தூர் 99946 46385
தருமபுரி : 84896 34827
உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

| | |
|---|---|
| சேலம் | 98405 90012 |
| ஓமலூர் | 94433 93373 |
| மேட்டூர் | 94432 23065 |
| ஏற்காடு | 94432 01447 |
| சங்ககிரி | 94434 14850 |
| ஆத்தூர் | 93642 22063 |
| தம்மம்பட்டி | 94434 71248 |
| எடப்பாடி | 98659 77117 |
| வாழப்பாடி | 96009 69118 |
| ஆட்டையாம்பட்டி | 94892 94473 |


# அரசு பொறியியல் கல்லூரி அமைப்பியல் துறையில் கட்டுமானக் கண்காட்சி

**ஓமலூர், பிப். 27:** சேலம் அரசு பொறியியல் கல்லூரி அமைப்பியல் துறை நடத்திய கட்டுமானக் கண்காட்சியில், புதுமை கட்டட மாதிரிகளை மாணவ, மாணவியர் காட்சிப்படுத்தினர்.

சேலம் அரசு பொறியியல் கல்லூரி அமைப்பியல் துறை சார்பில், மாநில அளவிலான கட்டுமானக் கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. துறைத் தலைவர் மற்றும் துணை முதல்வர் டி.ஷோபா ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற கட்டுமானக் கண்காட்சியை, கல்லூரி முதல்வர் வி.கீதா தொடங்கிவைத்து பார்வையிட்டார்.

இந்தக் கண்காட்சியில் உலகின் புகழ்பெற்ற கட்டடங்களின் மாதிரிகள், சாலையில் அதிக போக்குவரத்து இருக்கும்போது மின் உற்பத்தி, நிலநடுக்கத்தை தாங்கும் கட்டடங்கள், பாலங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், கடல் மற்றும் ஆறுகளின் நடுவே பாலம் அமைத்தல், உயர்ந்த கட்டுமானங்களை உருவாக்குதல் என 50-க்கும் மேற்பட்ட மாதிரி வடிவங்களை உருவாக்கி மாணவ, மாணவியர் காட்சிப்படுத்தி இருந்தனர்.

கண்காட்சியை தொடங்கிவைத்து பார்வையிட்ட சேலம் அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் வி.கீதா. உடன், துணை முதல்வர் டி.ஷோபா ராஜ்குமார் உள்ளிட்டோர்.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில் கல்லூரி முதல்வர் வி.கீதா பேசியதாவது:

சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் அமைப்பியல் துறை சார்பில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. உயர் கல்வி செல்லும் மாணவ, மாணவியர் தவிர மற்றவர்கள் வளாகத் தேர்வில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ. 14.50 லட்சம் ஊதியம் கிடைப்பதற்கான வேலைவாய்ப்பை தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் அவர்கள் பெற்றுள்ளனர்.

அமைப்பியல் துறைசார்ந்த ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மூலம் ரூ. 1.58 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், இந்திய பொறியாளர் கூட்டமைப்பின் சேலம் மையத் தலைவர் ஜெ.சங்கர், நீர்வளத் துறை உதவி செயற் பொறியாளர் பி.ஆர்.சியாமளா தேவி, கோவை குமரகுரு கல்லூரி பேராசிரியர் ஜி.எல்.சத்யமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொழில்நுட்ப போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# காபி சாகுபடி விவசாயிகளுக்கு தொழில்நுட்பக் கருத்தரங்கு

**தம்மம்பட்டி, பிப். 27:** தம்மம்பட்டி அருகே பச்சமலையில் காபி சாகுபடி விவசாயிகளுக்கான தொழில்நுட்பக் கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது.

பச்சமலை ஊராட்சி, வெங்கமுடி கிராமத்தில் நிலையான காபி சாகுபடியில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. தமிழ்நாடு காபி வாரிய இணை இயக்குநர் கருத்த மணி தலைமை வகித்தார். கேரள காபி வாரிய இணை இயக்குநர் தங்கராஜா, உதவி இயக்குநர் பிரபுகௌடா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகள்.

நிகழ்ச்சியில், காபி வாரிய முதுநிலை தொடர்பு அதிகாரி ஏற்காடு சக்திவேல், இளநிலை தொடர்பு அலுவலர் போடிநாயக்கனூர் சுதா, விரிவாக்க அலுவலர் ஏற்காடு ராஜேந்திரன் ஆகியோர் காபி விதை தேர்ந்தெடுக்கும் முறை, நாற்றங்கால் தயாரிக்கும் முறை, நடவு செய்யும் முறை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, காபி தோட்டங்களுக்கு உகந்த ஊடுபயிர், நிழல் பராமரிப்பு முறை, மண் பரிசோதனை செய்வதன் அவசியம் மற்றும் நன்மைகள், காபி வாரியத்தால் வழங்கப்படும் மானியத் திட்டங்கள், காபி ஏற்றுமதி செய்வதற்கான இ.யூ.டி.ஆர்.-இல் காபி விவசாயிகள் பதிவு செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

இந்த கருத்தரங்கில், பச்சைமலை காபி சாகுபடி விவசாயிகள் 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# முதல்வர் பிறந்த நாளில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

**சேலம், பிப். 27:** முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படும் என சேலம் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், எம்.பி.யுமான டி.எம்.செல்வகணபதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

முதல்வர் மு.க.ஸ்டாலில் 73-ஆவது பிறந்த நாளையொட்டி, சேலம் மேற்கு மாவட்ட திமுக சார்பில் எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி தொகுதியில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் வரும் மார்ச் 1-ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படும்.

இதுதவிர, நகர, ஒன்றிய, பேரூர், சிற்றூர், கிளைகள் உள்பட அனைத்து பகுதிகளிலும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கட்சிக் கொடியேற்றி இனிப்பு வழங்குவதுடன், மருத்துவ முகாம்கள், விளையாட்டுப் போட்டிகள், மரங்கள் நடுதல், ரத்த தான முகாம், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை மார்ச் மாதம் முழுவதும் ஏற்பாடு செய்து நடத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரியார் பல்கலை. மாணவர்கள் 105 பேர் ரத்த தானம்

**ஓமலூர், பிப். 27:** சேலம் அரசு மருத்துவமனைக்கு பெரியார் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் ரத்த தானம் அளித்தனர்.

பெரியார் பல்கலைக்கழக செஞ்சுருள் சங்கம் சார்பில், ரத்த தான முகாம் அண்மையில் நடைபெற்றது. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்க அமைப்பாளர் டி.இளங்கோவன் வரவேற்றார். பதிவாளர் வி.ராஜ் ரத்த தான முகாமை தொடங்கிவைத்து, ரத்த தானம் செய்த மாணவ, மாணவியரை பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

முகாமில், மாணவ, மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் 105 பேர் ரத்த தானம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் சேலம் அரசு மருத்துவமனை ரத்த வங்கி அலுவலர் மருத்துவர் ரவீந்திரன், வட்டார மருத்துவ அலுவலர் வி.வினோத்குமார், செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் ஜெ.கல்யாண்சுந்தர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சேலம் அரசு கலைக் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம்

**சேலம், பிப். 27:** சேலம் அரசு கலைக் கல்லூரியில் பன்னாட்டு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

தமிழ்த் துறை சிலம்பொலி செல்லப்பனார் தமிழ்க்காப்பு மன்றம், தமிழ் செம்மொழி இலக்கிய மன்றம், தேசிய சமூக இலக்கியப் பேரவை மற்றும் மூவேந்தர் முத்தமிழ் கிராமியக் கலைகள் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை ஒன்றிணைந்து 'தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் திறன்கள்' குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கில் பங்கேற்ற அனைவரையும் திருப்பதி வரவேற்றார். கல்லூரி முதல்வர் (பொ) பிரேமலதா தலைமை வகித்து, 'இலக்கியமும் வாழ்வியலும் ஒன்றிணைந்தவை' என்ற தலைப்பில் பேசினார். சிறப்பு விருந்தினர்களாக சேலம் தனியார் மருத்துவமனையின் மருத்துவர்கள் அர்த்தனாரி, செல்லம்மாள் ஆகியோர் பங்கேற்று வாழ்வியல் விழுமியங்கள் குறித்து சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து, பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த அறிஞர்கள் புலம்பெயர் இலக்கியம், தன்னிலை உணர்வு, சுயமேலாண்மை, நாட்டுப்புற மானிடவியல் மற்றும் நவீன இலக்கியங்கள் போன்ற தலைப்புகளில் கருத்துகளை பகிர்ந்தனர்.

இதில், மாது, சந்திரன், மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


Indian Bank — BANKING THAT'S # TWICE AS GOOD

**வாழவந்தநாடு கிளை**
vazhavandanadu@indianbank.bank.in

**பிற்சேர்க்கை–IV–'A' [விதி 8(6)/9(1) பார்க்க]**
**அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.**

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) /9(1)• (•பொருந்துகின்ற படி) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் – ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் அதிகாரபூர்வ அலுவலர், இந்தியன் வங்கி, வாழவந்தநாடு கிளை அவர்களால் ஆக்கப்பூர்வ சுவாதீனத்தில் (CONSTRUCTIVE POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்தச் சொத்துகள், பின்வரும் கடன்தாரர்கள் **1. திரு S சந்திரன் (கடன்தாரர் / அடமானதாரர்), S/o சீரங்கன், 12/12, தாணிமதிபட்டி, வாழவந்தநாடு கொல்லிமலை, நாமக்கல் – 637 411, 2.திருமதி.C.வெண்ணிலா (இணை விண்ணப்பதாரர்/ அடமானதாரர்), W/o S. சந்திரன், 2/12, தாணிமதிபட்டி, வாழவந்தநாடு கொள்ளிடம், நாமக்கல் – 637 411. 3. திரு.செல்வத்துரை (ஜாமீன்தாரர்), S/o கொங்கா, 67/A, தாணிமதிபட்டி, வாழவந்தநாடு கொல்லிமலை, நாமக்கல் – 637 411** அவர்களிடமிருந்து இந்தியன் வங்கி, வாழவந்தநாடு கிளைக்குச் (SECURED CREDITOR) சேரவேண்டிய பாக்கித்தொகை **ரூ.21,01,630/– (ரூபாய் இருபத்தோரு லட்சத்து ஆயிரித்து அறுநூற்று முப்பது மட்டும்) (23.02.2026 அன்றுள்ளபடி)** மற்றும் வட்டி சேர்த்து வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் **26.03.2026** அன்று விற்கப்படும்.

மின்–ஏல விற்பனை முறையில் விற்பனைக்கு உள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு: **திரு சந்திரன் S/o. சீரங்கன் திருமதி.C.வெண்ணிலா W/o. திரு சந்திரன் பெயரில் உள்ள சொத்து.** நிலம் மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகள், நாமக்கல் பதிவு மாவட்டம், சேந்தமங்கலம் பதிவு மாவட்டம், வாழவந்தநாடு கிராமம், கொல்லி மலைகள் தாலுகா, புதிய SF எண்:263/1,295,298/2,264/3,264/4, 263/1, 4.00 ஏக்கர் பரப்பளவு மற்றும் பாதை உரிமைகள் மற்றும் அங்குள்ள மற்ற அனைத்து ஈஸ்மெண்ட் உரிமைகளும் சேர்த்து பின்வரும் நான்கு எல்லைகளுக்குள்:S.F எண் 263/1க்கு: கிழக்கு: 20 லிங்க்ஸ் வண்டி பாதை, Sf.no.263/1, மேற்கு:மாணிக்கம் & கொங்கன் நிலம், வடக்கு :ராஜலட்சுமி நிலம், தெற்கு: வெண்ணிலா நிலம் S.F எண் 263/1:கிழக்கு:சிவபிரகாசம் நிலம், மேற்கு: வடமான் நிலம், வடக்கு: சிவபிரகாசம் நிலம், தெற்கு: தரிக நிலம்.

| | |
|---|---|
| சொத்து மீதான வில்லங்கம் எதுவும் | NIL |
| ரிசர்வ் விலை | ரூ.75.60 லட்சம் |
| EMD தொகை | ரூ.7.56 லட்சம் |
| உயர்த்திக் கோரவேண்டிய ஏலத்தொகை | ரூ.0.10 லட்சம் |
| மின் – ஏலத் தேதி | 26.03.2026 நேரம்: காலை 10:00 – மாலை 5.00 மணி வரை |
| சொத்து ID | IDIB6636642080 |

ஆன்லைன் விலைக் குறிப்பீட்டில் பங்கேற்பதற்கு விலைக்குறிப்பீட்டாளர்கள் எமது E–ஏல சேவை வழங்கும் நிறுவனமான PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., இணையதளம் பார்க்கவும்–(https://baanknet.com) விலைக் குறிப்பீடு செய்வதில் தொழில் நுட்ப உதவி ஏதும் பெற அழைக்கவும்– HELP DESK No. 8291220220. பதிவு நிலை அறிய மற்றும் EMD நிலை அறிய அணுகவும், மின்னஞ்சல் : support.baanknet@psballiance.com. சொத்து பற்றிய விவரங்களுக்கும், சொத்து புகைப்படத்திற்கும் விரிவான ஏல விதிமுறை நிபந்தனைகளுக்கும் பின்வரும் PSB அலையன்ஸ் பிரைவேட் லிட்., இணையதளத்தில் பார்க்கவும்: https://baanknet.com மேலும் விளக்கங்கள் பெற தொ.பே: 8291220220. சொத்து விவரத்தை https://baanknet.com என்ற இணைய தளங்களில் பார்வையிடும்போது மேற்குறித்த சொத்து ID எண் பயன்படுத்துமாறு விலைக் குறிப்பீட்டாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

தேதி : 23.02.2026 அதிகாரபூர்வ அலுவலர்
இடம் : வாழவந்தநாடு இந்தியன் வங்கி



KVB Karur Vysya Bank — Smart way to bank

சேலம் மண்டல அலுவலகம் :
கதவு எண்.269-A, முதல் தளம், பாரதி தெரு, ஸ்வர்ணபுரி, அழகாபுரம், சேலம் - 636 004. Email : salemdo@kvbmail.com

**சுவாதீன அறிவிப்பு**
**Issued under APPENDIX-IV [Rule 8(1)] of Security Interest (Enforcement) Rules, 2002**

2002-ம் ஆண்டு நிதிநிலை சொத்துக்களுக்கு உத்திரவாதம் தருதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் உத்திரவாத நல அமல் சட்டப்படி (Act 54 of 2002) **கரூர் வைஸ்யா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் 2002-ம் ஆண்டு உத்திரவாத நல (அமல்படுத்துதல்) விதி 3-ன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள **கடன்தாரர்கள் / உத்திரவாதமளித்தவர்கள்** ஆகியோருக்கு கீழே குறிப்பிட்டுள்ள தொகையை 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

கடன்பெற்றவர்கள் கீழ்கண்ட தொகையை திருப்பி செலுத்த தவறியதால் மேற்படி கடன்தாரர்கள் / உத்திரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு அறிவிப்பது யாதெனில் கீழே கையெழுத்திடவர் மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(4). விதி 8-ன் படி தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **23-02-2026** தேதியன்று கையகப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்கள் / உத்திரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொது மக்கள். இந்த சொத்து சம்பந்தமாக எவரேனும் பேரங்களும், மேற்கொள்ள வேண்டாமென்றும், அப்படியேதானது ஒப்பந்தங்களில் ஈடுபட்டால் அவை **கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்–ன்** கட்டுப்படுத்தாது எனவும், மேலும் வங்கிக்கு சேரவேண்டிய கீழ்கண்ட கிளைகளில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையுடன் வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்த மீதமுள்ள தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலமாக எச்சரிக்கப்படுகிறார்கள்.

கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவது யாதெனில் கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான காலஅவகாசம் சம்பாலி சட்டம் பிரிவு 13(8)க்கு உட்பட்டதாகும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

**வ.எண்.1 - நாமக்கல் மேற்கு கிளை :** கடன்தாரர்கள் / உத்திரவாதமளித்தவர்களின் பெயர் : **கடன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 1) திரு. K.இளமுருகன்.** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண்.6/1036, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001 மற்றும் **ஜாமீன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 2) திரு. K.செந்தில்குமார்,** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண்.6/1036, முருகா 14 வீதிஸ், EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001 மற்றும் **ஜாமீன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 3) திருமதி. K.செல்லம்மாள்.** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண். 6/507, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001

**கேட்பு அறிவிப்பு தேதி : 18-12-2025 & கேட்பு அறிவிப்பு நிலுவைத்தொகை : ரூ.11,28,659.75 (ரூபாய் பதினொறு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்பது மற்றும் எழுபத்து ஐந்து பைசா மட்டும்)** மற்றும் **30-11-2025** தேதியிலிருந்து பின்வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்தது.

**மொத்த நிலுவைத்தொகை : ரூ.11,59,208.75 (ரூபாய் பதினொறு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று எட்டு மற்றும் எழுபத்து ஐந்து பைசா மட்டும்)** மற்றும் **31-01-2026** முதல் பின் வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்த மீதமுள்ள தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலமாக எச்சரிக்கப்படுகிறார்கள்.

**அசையாச் சொத்துக்கள் விபரம் :** இச்சொத்தின் குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடமானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் ஜாயிண்ட் 2 துணைப் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, EB காலனி ரோடு, பெரியபட்டி கிராமம், பழைய ச.எண்.142/4, தற்போது புதிய ச.எண்.142/4B1A1A, இப்போது புதுப்பிக்கப்பட்ட புதிய சர்வே எண்.142/4B1A1A1 படி ச.எண்.142/4B1C, பட்டா எண்.1524-ல் அமைந்துள்ளது. மொத்தப் பரப்பளவு 4800 ச.அடி. இச்சொத்து மறைந்த திரு. C.காளியப்பன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் 1. K.செல்லம்மாள், 2. K.இளமுருகன், 3. K.செந்தில்குமார் ஆகியோருக்கு சொந்தமானது. **அயிட்டம் 4800 ச.அடி பரப்பளவை கொண்டது.** ச.எண்.142/7-க்கு **வடக்கு,** ச.எண்.142/4-ல் உள்ள 20 அடி கிழமேல் ரோட்டிற்கு **தெற்கு,** பழனியம்மாளின் பிற நிலங்களுக்கு **கிழக்கு,** ச.எண்.143/1-ல் உள்ள புறம்போக்கு நிலங்களுக்கு செல்லும் தென்வடல் ரோட்டிற்கு **மேற்கு. அளவுகள் :** கிழமேல் வடக்கு பக்கம் 79 அடி, தெற்கு பக்கம் 81 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 60 அடி, மேற்கு பக்கம் 60 அடி.

4800.00 சதுர அடி பரப்பளவு கொண்ட மேற்கூறிய சொத்துக்களுக்கு, 10.06.1983 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தில் (ஆவண எண்.840/83) பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, EB வைப்புத்தொகை, வளாகம், OHT மற்றும் கழிவுநீர் தொட்டி போன்ற அனைத்து பாதை உரிமைகளும், எளிமைப்படுத்தல் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**வ.எண்.2 - நாமக்கல் மேற்கு கிளை :** கடன்தாரர்கள் / உத்திரவாதமளித்தவர்களின் பெயர் : **கடன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 1) திரு. K.செந்தில்குமார்,** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண்.6/1036, முருகா 14 வீதிஸ், EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001 மற்றும் **ஜாமீன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 2) திருமதி. K.செல்லம்மாள்,** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண்.6/507, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001. **ஜாமீன்தாரர், சொத்தின் உரிமையாளர் : 3) திரு. K.இளமுருகன்.** த/பெ. லேட். திரு. C.காளியப்பன், க.எண்.6/1036, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் - 637001.

**கேட்பு அறிவிப்பு தேதி : 18-12-2025 & கேட்பு அறிவிப்பு நிலுவைத்தொகை : ரூ.46,44,313.08 (ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து முந்நூற்று பதிமூன்று மற்றும் எட்டு பைசா மட்டும்)** மற்றும் **30-11-2025** தேதியிலிருந்து பின்வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்தது.

**மொத்த நிலுவைத்தொகை : ரூ.47,73,793.08 (ரூபாய் நாற்பத்து ஏழு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று மூன்று மற்றும் எட்டு பைசா மட்டும்)** மற்றும் **31-01-2026** முதல் பின் வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்த மீதமுள்ள தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலமாக எச்சரிக்கப்படுகிறார்கள்.

**அசையாச் சொத்துக்கள் விபரம் :** இச்சொத்தின் குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடமானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் ஜாயிண்ட் 2 துணைப் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, EB காலனி ரோடு, பெரியபட்டி கிராமம், பழைய ச.எண்.142/4, தற்போது புதிய ச.எண்.142/4B1A1A, இப்போது புதுப்பிக்கப்பட்ட புதிய சர்வே எண்.142/4B1A1A1 படி ச.எண்.142/4B1C, பட்டா எண்.1524-ல் அமைந்துள்ளது. மொத்தப் பரப்பளவு 4800 ச.அடி. இச்சொத்து மறைந்த திரு. C.காளியப்பன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் 1. K.செல்லம்மாள், 2. K.இளமுருகன், 3. K.செந்தில்குமார் ஆகியோருக்கு சொந்தமானது. **அயிட்டம் 4800 ச.அடி பரப்பளவை கொண்டது.** ச.எண்.142/7-க்கு **வடக்கு,** ச.எண்.142/4-ல் உள்ள 20 அடி கிழமேல் ரோட்டிற்கு **தெற்கு,** பழனியம்மாளின் பிற நிலங்களுக்கு **கிழக்கு,** ச.எண்.143/1-ல் உள்ள புறம்போக்கு நிலங்களுக்கு செல்லும் தென்வடல் ரோட்டிற்கு **மேற்கு. அளவுகள் :** கிழமேல் வடக்கு பக்கம் 79 அடி, தெற்கு பக்கம் 81 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 60 அடி, மேற்கு பக்கம் 60 அடி.

4800.00 சதுர அடி பரப்பளவு கொண்ட மேற்கூறிய சொத்துக்களுக்கு, 10.06.1983 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தில் (ஆவண எண்.840/83) பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, EB வைப்புத்தொகை, வளாகம், OHT மற்றும் கழிவுநீர் தொட்டி போன்ற அனைத்து பாதை உரிமைகளும், எளிமைப்படுத்தல் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**வ.எண்.3 - நாமக்கல் மேற்கு கிளை :** கடன்தாரர்கள் / உத்திரவாதமளித்தவர்களின் பெயர் : **கடன்தாரர் : 1) M/s. விவேகம் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி,** தனி உரிமையாளர் திருமதி. சாரதா தனபால், க.எண்.108, அன்பு நிலையம், திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் - 637001 மற்றும் **சொத்தின் உரிமையாளர், ஜாமீன்தாரர் : 2) திருமதி. சாரதா தனபால்,** க/பெ. திரு. தனபால், க.எண்.2/31B, குறிஞ்சி நகர், கொண்டிசெட்டிப்பட்டி கிராமம், பெரியபட்டி அஞ்சல், நாமக்கல் - 637002

**கேட்பு அறிவிப்பு தேதி : 16-12-2025 & கேட்பு அறிவிப்பு நிலுவைத்தொகை : ரூ.51,78,870.07 (ரூபாய் ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து எண்ணூற்று எழுபது மற்றும் ஏழு பைசா மட்டும்)** மற்றும் **30-11-2025** தேதியிலிருந்து பின்வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்தது.

**மொத்த நிலுவைத்தொகை : ரூ.52,77,865.07 (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஐந்து மற்றும் ஏழு பைசா மட்டும்)** மற்றும் **31-01-2026** முதல் பின் வட்டி தொகையும், இதர செலவுகளும் சேர்ந்த மீதமுள்ள தொகைக்கு கட்டுப்படுத்துவதாக இருக்குமென்று இதன் மூலமாக எச்சரிக்கப்படுகிறார்கள்.

**அசையாச் சொத்துக்கள் விபரம் :** இச்சொத்தின் குடியிருப்பு நிலமானது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் ஜாயிண்ட் 1 துணைப் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, நல்லிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது. ச.எண்.115/2, தற்போது சப்-டிவிசன் படி தனி பட்டா எண்.1239, ச.எண்.115/2A, புஞ்சை ஹெக்டேர் 0.75.0, புஞ்சை ஏக்கர் 1.85, மதிப்பீடு ரூ.2.90 முழுமையாக. நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் ஜாயிண்ட் 1 துணைப் பதிவு மாவட்டம், நல்லிபாளையம் கிராமம், ச.எண்.115/3, புஞ்சை ஹெக்டேர் 1.90.5, ஏக்கர் 4.70, மதிப்பீடு ரூ.7.35, சப்-டிவிசன் படி பட்டா எண்.188, ச.எண்.115/3A, தற்போது சப்-டிவிசன் படி பட்டா எண்.2295, ச.எண்.115/3A2, புஞ்சை ஹெக்டேர் 0.02.0, புஞ்சை ஏக்கர் 0.05 மதிப்பீடு ரூ.0.08. மொத்தப் பரப்பளவு 1.90 ஏக்கர் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு 11.03.2021 அன்று Na. Ka. No.193/2021/Na Ma படி குடியிருப்பு அமைப்பிற்கான தொழில் நுட்ப ஒப்புதலை பெற்று மற்றும் Ma. Va. / Na. Ma. No.66/2021 ன் படி உதவி இயக்குநர், நகர்ப்புற வளர்ச்சி, நாமக்கல் அவர்களால் முறைப்படுத்தப்பட்டது மற்றும் 24.01.2022 அன்று Na. Ka. No.2135/2021/ஏப்ரல் 1 ன் படி ஆணையர், நாமக்கல் நகராட்சியால் ஒப்புதல் பெறப்பட்டது. வடக்குப் பகுதியின் மேற்குப் பகுதியில் உள்ள நிலத்தின் இடது பகுதி மீதமுள்ளது மற்றும் பிளாட் எண்.4 ல் மீதமுள்ள நிலம் மற்றும் பிளாட் எண்.5 மற்றும் 6 ன் தெற்கு பகுதி 1846+1800+1775=5421 ச.அடி மொத்தப் பரப்பளவைக் கொண்டது. இதற்குண்டான **எல்லைகள் : அயிட்டம் 5421 ச.அடி பரப்பளவைக் கொண்டது** – 9.14 மீட்டர் அகல தென்வடல் வழிப்பாதைக்கு **கிழக்கு,** பிளாட் எண்.3-க்கு **மேற்கு,** 10.0 மீட்டர் அகல கிழமேல் வழிப்பாதைக்கு **வடக்கு,** தங்கவேல் மற்றும் பிறருக்கு சொந்தமான பிளாட் எண்.4 ல் வடக்கு பக்கத்தின் மேற்கு பகுதியில் உள்ள ச.எண்.114 & நிலத்தின் ஒரு பகுதி & பிளாட் எண்.5 மற்றும் 6 ல் வடக்கு பக்க சொத்திற்கு **தெற்கு.** மேலே கூறப்பட்ட பிளாட் எண்.4 ல் மீதமுள்ள நிலம் இரண்டு அளவுகளை கொண்டுள்ளது. பிளாட் எண்.4 - 1846 ச.அடியில்